**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**
**O.S. No. 145/2021**

வாக்குமூலம்: வா.சா.1 – சத்யா

**17.02.2026 : சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1. எனது 2வது மகளான 3ஆம் வாதி கலிக்கநாயக்கன்பட்டியில் திருமணம் ஆகி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 3ஆம் வாதியின் ஆதார் கார்டு பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றால் சரிதான். எனது முதல் மகளான 2 ஆம் வாதி தற்போது பழனி, பெரியப்பா நகரில் குடியிருந்து வருகிறாரா என்றால் சரிதான். அவருடைய ஆதார் அட்டை பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் தற்போது எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் மானூரில் குடியிருந்து வருகிறேன். நான் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் எங்கு குடியிருந்தேன் என்றால் மானூரில் தான் குடியிருந்தேன். எனது வழக்குரையில் பழனி டவுன், கோபாலன் தெருவில் கதவு எண்.5 ல் வசித்து வருவதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் முதலில் அங்கு தான் குடியிருந்தோம். என்னிடம் காட்டப்படும் எனது ஆதார் கார்டு பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2ஆம் வாதி யின் ஆதார் அட்டையில் தந்தை பெயர் கோட்டைமுத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2. எனது ஆதார் கார்டில் எனது கணவர் பெயர் கோட்டை முத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதிலும் தவறாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது அதற்கு நான் மனு செய்து நடவடிக்கை எடுத்து வருகிறேன். வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் மேற்படி மனுவை கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நானும், தெய்வநாயகம் அவர்களும் கடந்த 20.08.1998 ஆம் தேதி சாட்சிகள் முன்னிலையில் விவாகரத்து பத்திரம் எழுதி அதை பதிவு செய்துள்ளோம் என்றாலும் அதில் உள்ள கையெழுத்து என்னால் போடப்பட்டது என்றாலும் சரியல்ல. தெய்வநாயகத்தின் கையெழுத்தை என்னால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் தெரியாது. மேற்படி விவாகரத்து பத்திரத்தை மறைத்து தான் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

3. நான் எனது கணவரிடமிருந்து விவாகரத்து பெற்றுக் கொண்டு கோட்டைமுத்து என்பவரை திருமணம் செய்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து

என்னுடையது தான். கடந்த 04.08.2023 ஆம் தேதி எனக்கு குறுக்கு விசாரணை உள்ளது என்னுடைய கையெழுத்து தான் என்றால் சரிதான். மேற்படி சாட்சியங்களின் உள்ள எனது கையெழுத்தும் கடந்த 20.08.1998 ஆம் தேதி ஏற்படுத்திய விவாகரத்து பத்திரத்தில் உள்ள கையெழுத்தும் ஒன்று தான் என்றால் சரியல்ல. நீதிமன்றத்திற்கு கோட்டைமுத்து வந்துள்ளாரா என்றால் இல்லை. நானும், தெய்வநாயகமும் 27 வருடங்களுக்கு முன்பு விவாகரத்து செய்து விட்டு பிறகு நாங்கள் சேர்ந்து வாழவே இல்லை என்றால் சரியல்ல. சின்ன சின்ன பிரச்சனைகள் வரும் ஆனால் திரும்பவும் சேர்ந்து ஒன்றாகத்தான் வாழ்ந்து வந்தோம். உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. அவர் இறக்கும் வரை அவருடன் தான் இருந்தேன். 1 ஆம் பிரதிவாதி கருப்பணன் என்பவரின் மனைவி வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தெய்வநாகத்தை விவாகரத்து செய்து விட்டு பின்பு கோட்டைமுத்துவை திருமணம் செய்து விட்டு தற்போது தெய்வநாயகத்திற்கு வாரிசு என்று உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. தெய்வநாயகம் இந்து மதத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். 2 ஆம் வாதி கிறித்துவ மதத்திற்கு மாறியதால் அவரது தந்தை தெய்வநாயகத்திற்கு கிடைக்கப் பெறும் சொத்துக்களிலும் பணிச்சலுகைகளில் வாரிசாக உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. 2 ஆம் வாதி முதலில் இந்து மதத்தை சார்ந்தவருக்கு திருமணம் செய்து பிறகு அவர் இறந்த பின்பு 2 ஆம் வாதியை கிறித்துவ மதத்தை சார்ந்தவருக்கு திருமணம் செய்து வைத்துள்ளோம். நான் தெய்வநாயம் இறக்கும் வரை நான் அவருடன் இருந்துள்ளேன் என்றும், அவரது ஈமச்சடங்குகளை செய்துள்ளேன் என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. தெய்வநாயகத்திற்கு பிரதிவாதிகளும் 3 ஆம் வாதிகள் தான் சட்டப்படியான வாரிசுகள் என்றால் சரியல்ல. நானும், 2 ஆம் வாதியும் வாரிசுரிமை கோரமுடியாது என்றால் சரியல்ல. நான் உண்மைகளை மறைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

<u>4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நானும் 2, 3 வாதிகளும் இறந்து போன தெய்வநாயகத்திற்கு வாரிசுகள் என்று விளம்புகை செய்யக் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நானும் தெய்வநாகமும் என்ன உறவு முறை என்றால் கணவர் மனைவி ஆகும்.

மேற்படி 1ஆம் பிரதிவாதிக்கும் தெய்வநாயகத்திற்கும் என்ன உறவு முறை என்றால் தவறான பழக்க வழக்கத்தில் இருந்தார்கள். 2, 3 வாதிகள் எனது மக்கள் ஆவார்கள் என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகள் தெய்வநாயகத்தின் மகள்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு போதிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledge by him/her to be correct

APOORVA S

Digitally signed by APOORVA S
Date: 2026.02.17 16:30:41 +0530

District Munsif,
Palani.